1972 சனவரி 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொன்றும் இப்பொழுது உத்தேசம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : ' அன்னிய மது வகை ' என்பதில் ' ஓயினும் ' சேரும் என்று நினைக்கிறேன். மதுரை மாவட்டத்தில் திராட்சை அதிகமாக உற்பத்தியாகும் பகுதியில் ஓயின் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையொன்றை அமைக்க வாய்ப்பு இருப்பதால் அதற்கு அனுமதியளிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி விண்ணப்பங்கள் வந்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த ஆலைகளில் தயாரிக்கும்பொழுது சாராயத்தின் விலை என்ன, அதை வெளியே அனுப்புகின்றபோது அதனுடைய விலை என்ன, அதை லைசன்ஸ்தாரர்கள் விற்பனை செய்கின்றபோது அதனுடைய விலை என்ன ஆகிறது என்பதை முதலமைச்சரவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்னும் இந்த ஆலைகளெல்லாம் தொடங்கப்படவில்லை. அதற்குப் பிறகுதான் அதனுடைய விலைகளெல்லாம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கூட்டுறவுத் துறையில் இம் மாதிரி விண்ணப்பங்கள் வந்தால் அவற்றை அனுதாபத்துடன் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கூட்டுறவுத் துறையில் இதுபோன்ற தொழிற்சாலையை ஆரம்பிக்கின்ற உத்தேசம் இப்பொழுது அரசுக்கு இல்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன்.

Quality control for toddy, etc.

* 64. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the steps taken by the Government to have quality control for toddy and arrack in this State?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விற்பனைக்கான அல்லது விற்பனைக்காக வைத்து வரப்படுகின்ற கள்ளும் சாராயமும் நல்ல தரமுள்ளதாகவும், கலப்படமில்லாததாகவும் இருக்கவேண்டுமெனப் பார்த்துக்கொள்ள கட்டளைகள் உள்ளன. போதை அதிகம் ஊட்டுவதற்கோ, வேறு எந்த நோக்கத்திற்கோ மதுவுடன் எந்தப் பொருளும் சேர்க்கப்படக்கூடாது. ஆய்வு அதிகாரிகள் எடுக்கும் கள் மாதிரிகள் தமிழ்நாடு ஆயத்துறை—மதுவிலக்கு ஆய்வுக் கூடத்தில் பரிசோதிக்கப்படுகின்றன.

சாராயத்தைப் பொறுத்தமட்டில், நெல்லிக்குப்பம், திருச்சி, வடிசாலைகளில்—தயாரிக்கப்படுகிற சாராய மாதிரிகள் சென்னையில் தமிழ்நாடு ஆயத்துறை—மதுவிலக்கு ஆய்வுக்கூடத்தில், இவை

இந்தியத்தர விவரக்குறிப்புகளுக்கிணங்க உள்ளனவா என்று பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. வடிசாலைகளில் சாராயம் தயாரிக்கப்பட்டு ஆயத்துறை அதிகாரிகள் முன்னிலையில் வழங்கப் படுகின்றன. சாரயத்தின் திண்மையைச் சோதிக்க நீர் அளவிகள் (Hydrometers) அதிகாரிகளுக்குக் கொடுக்கப் பட்டுள்ளன. சாரயத்தை வெளியே அனுப்புமுன் வடிசாலைகளும் தங்கள் பொறுப்பில் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்கின்றன.

THIRU N. DENNIS : Is this Government aware that in spite of the measures, adulteration takes place?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூலக் கேள்விக்கு நான் அளித்த பதிலில் இந்த விவரங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : திருச்சியிலும் நெல்லிக்குப்பத் திலும் தான் இந்த சாராய வடிசாலைகள் இருக்கின்றன. இப் பொழுது தென் மாவட்டங்களுக்கு வேண்டியது திருச்சி வடி சாலையிலிருந்துதான் வருகிறது. அதனுடைய 'க்வாலிடி' நெல்லிக்குப்பத்தினுடைய மாதிரி இல்லை என்று சொல்லுகிறார் களே இதில் ஏதாவது உண்மை உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் புகார் பற்றி கவனிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வார்னிஷ் போன்றவற்றை அருந்தி பலர் மாண்டதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இதுமாதிரி நிகழ்ச்சிகள் வராமல் தடுக்க அர சாங்கம் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப்போகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இங்கு சென்னையைப் பொறுத்த வரையில் ஒருவர் இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. டில்லியில் 80 பேருக்கு மேல் இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. இரண்டும் இந்தியாவிலேயே இருந்தாலும் டில்லி வேறு, சென்னை வேறு. ஏனென்றால், சென்னையில் ஏதாவது நடந்தால் அது பெரிய அமர்க்களப்படுகிறது. அந்த வகையில் ஒருவர் இறந்ததுபற்றி அவர் கவலை தெரிவித்தார். ஒருவர்கூட இறக்கக்கூடாது என்பது தான் அரசாங்கத்தின் எண்ணமாகும். இவைகளையெல்லாம் தடுப்பதற்கேற்ற வகையில், மதுகாஷயம் போன்றவற்றை விற்பனை செய்கிறவர்கள் போலீசாரால் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : பாதுகாப்புச் சட்டப் பிரகாரம், மதுக் கடைகள் வைக்கும் இடம் பொது இடங்களுக்கு அருகா மையில் இருப்பதால் பொதுமக்களுக்கு அசௌகரியமாக இருக் கிறது. அதை எடுக்கவேண்டுமென்று கேட்டால் கோர்ட்டுக்குப் போகிற அளவு நிலைமை மாறியிருக்கிறது. இது சம்பந்தமாக அரசு ஏதாவது திருத்தியமைப்பதற்கு முடிவு எடுக்குமா ?

1972 சனவரி 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது மக்களிடமிருந்து வருகிற அது பற்றிய புகார்கள் விசாரிக்கப்பட்டு, கூடுமானவரையில் அந்த இடங்களிலிருந்து அந்தக் கடைகள் அகற்றப்பட்டு வருகின்றன. ஒரு சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றால், அதையும் நாம் சந்திக்க வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அரசாங்கம் தயாரித்து விற்கின்ற சாராயம், குடிக்கின்றவர்கள் எதிர்பார்த்த அளவுக்குப் போதை தருவதாக இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்கள் விருப்பத்திற்குத் தக்கபடி போதையைக் கூட்டி தயாரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் சார்பாகச் சொல்லப்பட்ட இந்தக் கோரிக்கை உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும். ஆனால் ஒரு திருத்தம். 'அரசாங்கம் தயாரித்து விற்கின்ற சாராயம்' என்பது சரியல்ல. அரசாங்கம் சாராயம் எதையும் தயாரித்து விற்கவில்லை.

Sale of liquor

* 65 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to ban the sale of liquor on specific days; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) அவ்வித உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

திரு. என். டென்னிஸ் : ஷாப் அஸிஸ்டென்ட்ஸ் ஆக்ட் பிரகாரம் கொடுக்கக்கூடிய விடுமுறை நாட்கள் இதற்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி உத்தேசம் இல்லை. ஆனால், இப்பொழுதிருக்கின்ற ஸேல்ஸ் நோட்டிபிகேஷன்படி, குறிப்பிட்ட ஒரு கடை, அல்லது எந்த ஒரு கடையானால், எல்லா வகை டெபோக்களையும் குறிப்பிடுகிற கிழமைகளில் நிறுத்தும்படியாக ஆணையாளர் ஆணையிடலாம் என்று இருக்கிறது. தேர்தல் நடைபெறுகிற நேரத்தில் அந்தக் கடைகள் மூடப்பட வேண்டும் என்று உத்திரவிடுவதற்கு அந்த நிபந்தனை வகை செய்கிறது. அதைப் போலவே, சட்டம், ஒழுங்கு. அமைதி இவைகளுக்குக் கேடு வரும் வகையில் ஏதாவது கலவரங்கள், அமளி ஏற்படுமானால் அந்த நேரத்திலும் அதுபோன்ற கடைகள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடாது என்று தடுப்பதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.